செ.வெ.எண் : 09/ மே நாள் : 08.05.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் சென்று சேர்வதை உறுதி செய்திட வேண்டும்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் வணிகர்கள் உடனான ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுரை**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (08.05.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு தடையின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல் தொடர்பாக அனைத்து வர்த்தக சங்க பிரதிநிதிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த, தவிர்க்க முடியாத காரணங்களின் அடிப்படையில் 10.05.2021 காலை 4.00 மணி முதல் 24.05.2021 காலை 4.00 வரை இரு வாரங்களுக்கு மாநிலம் முழுவதும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்கள். முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் நலனுக்காக அத்தியாவசிய உணவு பொருட்கள் விற்பனை செய்யும் தனியாக செயல்படுகின்ற மளிகை கடைகள், பலசரக்குகள், பால், காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன் விற்பனை செய்யும் கடைகள் மட்டும் குளிர்சாதன வசதியின்றி மதியம் 12.00 மணி வரை இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்கள் சிரமமின்றி சென்று சேர்வதில் மொத்தம்/சில்லறை வணிகர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். கடந்த ஆண்டு முழு ஊரடங்கின் போது மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பு வணிகர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். தற்போது நடைமுறைப்படுத்தப்படும் முழு ஊரடங்கின் போதும் வணிகர்கள் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும். மாவட்டத்தில் உள்ள மொத்தம் மற்றும் சில்லறை வணிகர்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் விநியோக சங்கிலி (Supply Chain) பாதிக்காத வகையில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக வேளாண்மைத்துறை இணை இயக்குநர் தலைமையில் சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

வணிகர்கள் அரசு வரையறுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் முறையே பின்பற்றிட வேண்டும். அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே கடைகளில் விற்பனை செய்ய வேண்டும். தங்களது கடைகள்/நிறுவனங்களில் பொதுமக்கள் கூட்டம் கூடாமல் தவிர்ப்பதை உறுதி செய்திட வேண்டும். வணிகர்கள் அத்தியாவசிய பொருட்கள் ஏற்றிச் செல்லும் தங்களது வாகனங்களுக்கு சிரமம் ஏற்பட்டால் 94981 29498, 83000 36138, 83000 31100, 94981 01615 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம். பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய உணவு பொருட்கள் வழக்கம் போல்தங்குதடையின்றி கிடைக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொருட்கள் கிடைக்குமா என்ற அச்சத்துடன் பொதுமக்கள் மொத்தமாக பொருட்களை வாங்கி தேக்கி வைக்க அவசியமில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்கபணிப்பாளர் திரு.சி.ஜெயசிங், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இரா.பழனிகுமார், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.டாம்.பி.சைலஸ், துணை இயக்குநர்கள் (வேளாண்மை) திரு.எஸ்.எஸ்.சேக் அப்துல்லா, (தோட்டக்கலை) திரு.நாகராஜன் உட்பட அரசு அலுவலர்கள், வணிகர் சங்க பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**